# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,309 — 1937 ம் ஞூ ஆவணிமீ 13 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

இராச்சிய மந்திரசபை.

1937 ம் ஆண்டில் வாக்காளர் இடாப்புகளைத் திருத்தி யமைத்தல்.

கொழும்பு வடபாக, மத்தியபாக, தென்பாகத் தெரிவுப்பகுதிகள்.

இலங்கையிலே தங்கள் வாசஸ்தாபனகாரணம்பற்றி 1931 ம் ஆண்டில் இலங்கை இராச்சிய மந்திரசபைப் பிரதிநிதித் தெரிவுகள் சம்பந்தமாக ஆலோசனைச் சபையிற் செய்த கட்டளையின் 7 ம் அம்சத்தின்படி கொழும்பு வடபாக, கொழும்பு மத்தியபாக, கொழும்பு தென்பாகத் தெரிவுப்பகுதிகளுக்குரிய வாக்காளர் இடாப்புக்களில் தங்கள் பெயர்களைப் பதிவித்துக் கொள்வதற்கு யோக்கியதையுள்ள யாவரும் அறிந்துகொள்ளும்பொருட்டாக, அவ்வண்ணம் யோக்கியதை யுள்ளவர்களும் வேறுவகையாக யோக்கியதை கெடப்பெறுதவர் களுமானவர்களின் பெயர்களை விசாரித் தரிந்துகொள்ளும்படி பல அரசாங்க லேக்கர்கள் (clerks) எண்ணிக் கணக்கெடுப்பவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்று, இதனால் விளம்பரம்பண்ணப்படுகின்றது.

மேற்சுட்டிய் காரியங்களைப்பற்றிய விவரங்கள் அறிந்துகொள்ளும்படியாக 1937 ம் ஆண்டு (ஆகஸ்ற்) ஆவணிமீ 10 ந் தேதிக்கும் 31 ந் தேதிக்கிடையில் தங்கள் தங்களுக்கென்று குறித்துவிடப்பட்ட இடப்பரப்புகளில் உள்ள வீடுகளுக்குப் போய்வரும்படி எண்ணிக் கணக்கெடுப்பவர் ஒவ்வொருவருக்கும் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போ மறுப்டி திருத்தி அமைக்கப்படும் வாக்காளர் இடாப்புகளைக் கூடியமட்டும் பூரணமானவைகளாக்குவதற்காய் மேற்சொல்லிய எண்ணிக் கணக்கெடுப்பவர்கள் உண்மையும் திட்டமுமான விவரங்கள் அறிந்துகொள்ளத்தக்கதாக அவர்களுக்கு உதவிசெய்து அவர்களோடு கூடிமுயலும்படி இக்காரியத்திற் கருமசம்பந்தமுள்ள யாவரையும் பதிவு செய்யும் உத்தியோகஸ்தர் வேண்டிக்கொள்ளுகிறார். பதிவு செய்யும் உத்தியோகஸ்தர் அப்படியாகக் கூடிமுயலும் உதவிக்காய் மிகவும் நன்றியுள்ளவராயிருப்பார்.

மேலே குறிக்கப்பட்ட 7 ம் அம்சத்தின்படி யோக்கியதையுள்ள வாக்காளர் எவரும் 1937 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதிமீ 1 ந் திகதிக்குமுன் எண்ணிக் கணக்கெடுப்பவரைச் சந்திக்காவிடின் அல்லது எண்ணிக் கணக்கெடுப்பவரைக்கொண்டு தமது பெயரைப் பதிவு செய்விக்காவிடின் அத்திகதிக்குப்பின் அதனைப்பற்றி இக்கந்தோருக்கு உடனே அறிவித்தல் வேண்டும்.

ஜே. சீ. டபிள்யு. றெக்,
கொழும்பு வடபாக, மத்தியபாக, தென்பாகத் தெரிவுப் பகுதிகளின் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர்.

பதிவுகாியஸ்தர் தலைவர் கந்தோர்,
கொழும்பு, 1937 ம் ஆண்டு (ஆகஸ்ற்) ஆவணிமீ 5 ந் வ.

### 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கத் திருஸ்தல யாத்திரைச் சட்டம்.

முன்னேஸ்வரக் கோவில் திருவிழா சம்பந்தமாக உண்டாக்கப்பட்ட ஒழுக்க விதிகள்.

பிரதி தேசாதிபதியவர்களால் தமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி "திருஸ்தல யாத்திரைச்சட்டம்" எனப் பெயர் பூண்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்ட ஒழுக்க விதிகள்.

டி. பீ. ஜயதிலக,
கௌரவ உள்நாட்டு அரசியல் மந்திரியவர்கள்.

உள்நாட்டு அரசியல் மந்திரியவர்கள் கந்தோர்,
கொழும்பு, 1937 ம் ஞூ ஆவணிமீ 6 ந் வ.

மேற்குறித்த ஒழுக்க விதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு" என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் அடங்கிய விசாலத்தைக் கருதும்.

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான் அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கிவைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாழ்வீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினால் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலசலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும் தண்ணீர்ப் பதார்த்தமான அல்லது கட்டிப் பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (a) வாடிக்குரிய இடப்பரப்பில் ஆடுமாடு வைத்திருக்கப்படாது. உதவி அரசாட்சி ஏசன்றரால ஆடுமாடு கட்டுகிறதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது ஒரு மாட்டுக் காலையாகப் புறம்பாக நியமிக்கப்பட்ட ஒரு இடத்தி ஒழிய வாடிக்குரிய இடப்பரப்புக்குச் சமீபமாக ஆடுமாடு வைத்திருக்கப்படாது.

(b) ஆடுமாடுகளைத் தன்பொறுப்பில் வைத்திருப்பவன் வாடிக்குச் சேர்ந்த இடப்பரப்பில் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப் பட்ட இடத்தில போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடுமாடுகள் நிற்கும் இடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடு களும் ஈ இலையான் விழாமலும் தூசிபடியாமலும் இருக்கும்படி (a) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும். அல்லது (b) கண்ணடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும். அல்லது (c) வைத்திய உத்தியோகஸ்தரால் வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப் பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும் தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப் புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளை நோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தலயாத்திரைக் காரரை, யாத்திரை ஸ்தலத்தை விட்டுப்போகும்படி செய்தும் அவர்கள் அங்கிருந்து எப்பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிக்கலாம்.

9. (a) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்துவியாதியுள்ள ஒவ்வொருவரும் அல்லது (b) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவ னுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்தருக் கல்லது சுகாதார உத்தி யோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தை யல்லது கிணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாகவைத்து அதைக் குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட் டிருந்தால் அக்குளத்தை யல்லது அக்கிணற்றை அது ஒரு புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசண்டரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பான் போறனை சோடாமோள் அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ்லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றைய தெருக்களின் எல்லைக்குட் செல்லக்கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச்சீட்டு அல்லது லைசென்ஸ் பெறுமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விட வேனும்படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒரு வராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்குமிடங் களில் ஆடுமாடு அடிப்போர் அவ்விடத்தை துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

முன்னேஸ்வரக்கோயில் திருவிழா வாடிஎல்லை.

வடக்கு :—பாலைக்குளம், கொஹொம்பகஸ்பிற்றிய ; முத்தறந்தளுவ ; முன்னேஸ்வரம் குளம்.

தெற்கு :—முன்னேஸ்வரம் வயல் ; நல்லநாயகன் குளம்.

கிழக்கு :—முன்னேஸ்வரம் குளம் ; சிலாபத்திலிருந்து குருநாகலுக் குப் போகும் பெருவழி ; நல்லநாயகன் குளம்.

மேற்கு :—முன்னேஸ்வரம் வயல் ; சிலாபத்திலிருந்து குருநாகலுக்குப் போகும் றெருவழி, பாலைக்குளம்.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்.
நொம்பர், 1,583 (குருநாகல்.)

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விபரித்துள்ள காணிக்கு அல்லது அதன் எப்பங்குக்கேனும் அல்லது அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1937 ம் ஞு (ஆகஸ்ட்) ஆவணி மாதம் 13 ந தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் இதனடியிற் கை யொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண் டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம்பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற் சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது.

1937 ம் ஞு (ஜூன்) ஆனிமீ 22 ந தேதியிலன்று குருநாகல் கச்சேரி யில் கொடுக்கப்பட்டது.

சீ. எச். ஹார்ட்வெல்,
உதவி அரசாட்சி ஏஜன்ற், குருநாகல் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ற் அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிட மும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ் சொல்லப்படுங் காணித்துண்டு வடமேல் மாகாணத்தில் குருநாகல் டிஸ்திறிக்கில் வாயுடவிலிஹற்பத்துவில் மகாகல்பொட மெகொட கோறளை வடக்கில் றதமலெ கிராமத்தில் இருக்கின்றது :—

பிரதமபடத்து இல. A 496.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | நக்கத்துலகேவலேஹேன அல்லது அகொடவலே மூக்கலான .. .. | 14 1 16 |

எல்லைகள் : வடக்கே-அமுனுகம கிராமத்தின் எல்லை ; கிழக்கே- பற்றுவவ கிராமத்தின் எல்லை : தெற்கே-பற்றுவவ கிராமத்தின் எல்லை யும், முடிக்குரிய அகொடவலேஹேன என்னும் 6,559 ம் இலக்கப் பிரதம படத்தின் 1 ம் இலக்கத் துண்டும் ; மேற்கே-றதமலேஎல.

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 1,584 (கேகாலை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கெனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1937 ம் ஞு (ஆகஸ்ட்) ஆவணிமீ 13 ந தேதியி லிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவ ருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணி யுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக் குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத் திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற் சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1937 ம் ஞு ஜூன் ஆனிமீ 30 ந தேதியிலன்று கேகாலைக் கச்சேரி யில் கொடுக்கப்பட்டது.

கார்ள் ஈ. ஆன்ற்,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விப ரத்தை கேகாலை உதவி அரசாட்சி ஏஜன்று அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்த ரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகள் எவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சபரகாம மாகாணம் கேகாலை டிஸ்திறிக், பெலிகல் கோறளை, கிரவெலி பற்று கிழக்கு பகலலினகல கிராமத்திலிருக்கும் துண்டுக் காணிக ளாவன:—

பிரதமபட இல. 2,890.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 3 | கலுகலஹேன அல்லது கெக்கிலறங்கவத்தஹேன | 9 1 25 |
| 3A | ஷை .. .. | 7 3 36 |
| | | 17 1 21 |

எல்லைகளாவன : வடக்கு-பி. ப. 2,890 ல் 1 ம் துண்டு காணி (உ. ப. 393,427), உ. ப. 101,488, பி. ப. 2,890 ல் 2 ம் துண்டு காணி (உ. ப. 396,399) ; கிழக்கு-சுதுஹக்குறுகே புஞ்சிஉங்காவும் மறுவும் உரித்தாடும் றங்கவத்தஹேன, உ. ப. 101,487, பாரதெனியஎலா ; தெற்கு-பார தெனிய கிராம எல்லை ; மேற்கு-பி. ப. 2,890 ல் 1 ம் துண்டு காணி உ. ப. 397,427).

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் 1 ம் கட்டையடியில் நாவலப்பிட்டி–நுவரெலியா ரோட்டை விஸ்தரிப் போடுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :— .

பிரதமபடத்து இல. A 409. குறிச்சி—நாவலப்பிட்டிப் பட்டணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 2 | பிறிச்சென்டு தோட்டம் (153 ம் இடாப்பு இலக்கத்தின் பகுதி) | 40 வயது றப்பர் .. | நாவலப்பிட்டிக் கட்டடக் கம்பேனியார், ஏஜண்டுமார் பாஸ்றெட் பிறதேஸ், கொழும்பு | 0 | 0 | 34·94 |
| 3 | பெருந்தெரு (153 ம் இடாப்பு இலக்கத்தின் பகுதி) | பெருந்தெரு, (புதுக்கவிலத்திப் போடப்பட்டது) | ஷை .. | 0 | 0 | 14·91 |
| 4 | பிறிச்சென்டு தோட்டம் (153 ம் இடாப்பு இலக்கத்தின் பகுதி) | தறிக்கப்பட்ட 40 வயது றப்பர் மரங்களின் அடிக்கட்டைகளுள்ள வெறுங்காணி | ஷை ... | 0 | 0 | 9·42 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆு (செப்டெம்பர்) புரட்டாதி மாசம் 16 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு நாவலப்பிட்டிப் பகிரங்கவேலைக் கந்தோர கமான வங்களாவில் என்முன்பாக வெளிப் பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1937 ம் ஆு (ஆகஸ்ட்) ஆவணிமீ 10 ந் உ.

எச். எஸ். எம். ஹோர்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.